සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| තෙවන වාර පරීක්ෂණය | 2020 | ශ්‍රේණිය 11 |
| **மூன்றாம் தவணைப் பரீட்சை** | **2020** | **தரம் 11** |
| **Third Term Test** | **2020** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **குடியியற் கல்வி** | **II** | **இரண்டு மணி** |
| පුරවැසි අධ්‍යාපනය | **II** | පැය දෙකයි |
| **Civics** | **II** | **Two Hour** |

❖ **கவனிக்கவும்**
- முதலாம் வினா கட்டாயமானது
- முதலாம் வினாவும் மேலும் நான்கு வினாக்கள் உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக

01)
1. ஒற்றை ஆட்சி முறை நடை பெறும் நாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.
2. சனநாயக ஆட்சி முறை நடை பெறும் ஒரு நாட்டில் அரசியல் யாப்பிற்கமைய செயற்படுவதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக.
3. அரசு ஒன்றின் பொறுப்பாக அமையும் விடயங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
4. இலங்கையில் செயற்படுகின்ற உள்ளூராட்சி மன்றங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. சுவிஸ்சர்லாந்தின் அரசியல் பேரவைக்கு உரித்தான நிறுவனங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
6. பொருள் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் நுட்பங்கள் இரண்டைக் குறிப்பிடுக.
7. நிலைமாறும் பொருளாதாரத்தின் அடிப்படைப் பண்புகள் இரண்டைக் குறிப்பிடுக.
8. சிறுவர்களின் உரிமையைப் பாதுகாக்க இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை இரண்டைக் குறிப்பிடுக.
9. 1978ம் ஆண்டின் இரண்டாம் குடியரசு யாப்பில் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டு இருக்கும் அதிகாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. இலங்கையின் அபிவிருத்திக்கான சவாலை வெற்றி கொள்வதற்காக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் இரண்டைக் குறிப்பிடுக.

(2 x 10 = 20)

02)
1. தற்காலத்தில் நேரடி சனநாயக ஆட்சி முறையை நடைமுறைப்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் இரண்டைத் தருக. (2 புள்ளிகள்)
2. சனநாயக ஆட்சி வெற்றி பெறுவதற்கு எதிர்கட்சியின் பொறுப்புக்கள் கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. 1. சனநாயகப் பிரசைகளிடம் காணப்படும் முக்கிய பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   2. அதில் ஒன்றின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்கப்படுத்துக. (2 புள்ளிகள்)

03)

1. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. நல்லாட்சியின் அடிப்படைப் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. 1. பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தில் நல்லாட்சியை நடைமுறைப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   2. அதில் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

04)

1. மோதல் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக (2 புள்ளிகள்)
2. மோதல் தீர்த்தலின் போது நடுநிலையாளர் தலையீடு செய்ய கூடிய சந்தர்பங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. 1. மோதலை சமாதானமாத் தீர்ப்பதனால் ஏற்படும் பயன்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   2. அதில் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

05)

1. சட்டத்தின் மூலாதாரங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. தாமதமின்றியும் பக்கச்சார்பற்ற முறையிலும் நீதி நிலைநாட்டப்படாத போது ஏற்படக் கூடிய பாதகமான விளைவுகள் மூன்றைக் குறிப்பிடுக (3 புள்ளிகள்)
3. 1. நீதித்துறையின் சுதந்திரத்தைப் பேணும் வகையில் இலங்கை அரசினால் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   2. அதில் ஒன்றை சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

06)

1. சூழலில் இருந்து மனிதனுக்கு கிடைக்கும் நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. உயிர் சூழலுக்கு வரும் பாதிப்புக்களினால் ஏற்படும் விளைவுகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. 1. நிலைபேண் அபிவிருத்தியில் பிரசைகளின் கடமைகள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   2. அதில் ஒன்றைப் பற்றி சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)

07)

1. சர்வதேச உறவுகளின் வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)
2. சர்வதேச வர்த்தகம் மற்றும் உறவுகள் தொடர்பான சர்வதேச நிறுவனங்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3. 1. சர்வதேச உறவுகள் வளர்ச்சியடைவதில் தாக்கம் செலுத்திய காரணிகள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
   2. அதில் ஒன்றைப் பற்றி சுருக்கமாக விளக்குக. (2 புள்ளிகள்)